සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**61 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ................

## புவியியல் I

※ இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டது.
※ ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**61 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

## புவியியல் II

※ இவ்வினாத்தாள் **I, II** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
※ பகுதி **I** இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
※ பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
※ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**
**Department of Examinations, Sri Lanka**

**61 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

| | |
|---|---|
| භූගෝල විද්‍යාව | I, II |
| புவியியல் | I, II |
| Geography | I, II |

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| **மேலதிக வாசிப்பு நேரம்** | - | **10 நிமிடங்கள்** |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**சுட்டெண் :** ________________

## புவியியல் I

※ இவ்வினாத்தாள் **40** வினாக்களைக் கொண்டது.
※ ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து **புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**1.** இலங்கை ____________________________ புவியோட்டு விருத்திக்குரிய தகட்டில் அமைந்துள்ளது.
(அராபியன் / ஆபிரிக்க / இந்தோ - அவுஸ்திரேலிய)

**2.** பூகோளத்தின் மொத்த நீரின் அளவில் சமுத்திர நீரானது ___________ ஆகும்.
(97.5% / 79% / 71%)

**3.** மூன்று படைகளைக் கொண்ட மண்ணின் பக்கப் பார்வையில் உக்கல் மண் காணப்படுவது _________ படையில் ஆகும்.
(A / B / C)

**4.** மத்தியதரைக் காலநிலை என்பது ஒரு விசேடமான காலநிலை வகையாக விளங்குவதுடன் உலகின் _________________ காலநிலை வலயத்திற்குள் அதனை இனங்காண முடியும்.
(அயன / இடைவெப்ப / குளிர்)

**5.** தென் அமெரிக்காவில் அமைந்துள்ள பிரதான மலைத்தொடரானது ________________________ மலைகள் என அறியப்படும்.
(கோடிலரா / அந்தீஸ் / றொக்கி)

● **6** தொடக்கம் **10** வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து, அவை சரியாயின் '**ச**' ஐயும் பிழையாயின் '**பி**' ஐயும் சுற்றி வட்டம் வரைக.

**6.** காரீயம் என்பது இரும்பினைக் கொண்ட ஒரு பெறுமதியான கனிய வளமாகும். ச / பி

**7.** இலங்கையின் மண் வகைகளுள் செங்கபில நிற லட்டோசல் மண்ணானது ஈர வலயச் சூழலுக்குரிய ஒரு மண் வகையாகும். ச / பி

**8.** உலகின் மொத்த நிலப் பகுதியில் ஐதான குடித்தொகை கொண்ட பகுதிகள் ஏறக்குறைய 65% ஆகும். ச / பி

**9.** இலங்கைக்கான பால் தேவையின் மொத்த அளவும் உள்ளூர் பால் உற்பத்தி மூலமே வழங்கப்படுகின்றது. ச / பி

**10.** புவியில் அங்கிகளின் இருப்புக்குச் சாதகமான வளிமண்டலமானது பச்சைவீட்டுத் தாக்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. ச / பி

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- **11** தொடக்கம் **19** வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

**11.** புவியின் உட் பகுதியிலிருந்து மேற்பரப்புக்கு வரும் உருகிய மக்மா குழம்பு குளிர்ச்சியடையும்போது _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ தீப்பாறைகள் உருவாக்கப்படுகின்றன.

**12.** வட கோளத்தில் 50° தொடக்கம் 60° வரையுள்ள அகலக்கோடுகளுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ காடுகள் பரம்பிக் காணப்படுகின்றன.

**13.** இலங்கையின் ஆள்புலக் கடல் எல்லையானது கரைக் கோட்டிலிருந்து _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ கடல் மைல்கள் வரை விரிவடைந்துள்ள ஒரு வலயமாகக் கருதப்படுகின்றது.


**14.** உலகில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுவதும் நுகரப்படுவதுமான தானியப் பயிர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ ஆகும்.

**15.** விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகிய மூன்று துறைகளைப் பொறுத்தவரை, இலங்கையின் ஊழியப் படையில் பெருமளவானோர் _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ துறையிலேயே ஈடுபட்டுள்ளனர்.


- கீழே தரப்பட்டுள்ள வரைபுகளைப் பயன்படுத்தி **16** தொடக்கம் **19** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கீழே தரப்பட்டுள்ள Ⓐ, Ⓑ மற்றும் Ⓒ ஆகிய மூன்று வரைபுகளில் 2019 ஆம் ஆண்டில் உலகின் மூன்று நாடுகளது குடித்தொகையின் வயதுக் கட்டமைப்பு எடுத்துக் காட்டப்படுகின்றது.


Ⓐ




Ⓑ




Ⓒ




மூலம் : https://www.populationpyramid.net/

**16.** பிள்ளை - தங்கியிருத்தல் பெறுமானத்தை உயர்வாகக் கொண்டிருக்கும் நாட்டினைக் குறித்துக் காட்டும் எழுத்து யாது? _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

**17.** குடித்தொகைக் குறைப்பு இடம்பெறுவதை அவதானிக்கக்கூடிய நாட்டினைக் குறித்துக் காட்டும் எழுத்து யாது? _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

**18.** குடித்தொகை வளர்ச்சியைப் பெரும்பாலும் நிலையானதொரு மட்டத்தில் கொண்டிருப்பதைக் காட்டும் நாட்டினைக் குறித்துக் காட்டும் எழுத்து யாது? _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

**19.** ஆயுட்கால எதிர்பார்ப்பு தாழ் மட்டத்தில் காணப்படுவதாகக் கருதக்கூடிய நாடொன்றினைக் குறித்துக் காட்டும் எழுத்து யாது? _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _

- **20** தொடக்கம் **24** வரையுள்ள வினாக்களில் 'அ', 'ஆ' என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்கிற்கேற்ப 'ஆ' நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய **இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**20.**

| 'அ'<br>பயிர் | 'ஆ'<br>பயிர்ச்செய்கைக்கான முக்கிய மாவட்டங்கள் |
|---|---|
| 1. தேயிலை | A - களுத்துறை |
| 2. இறப்பர் | B - ஹம்பாந்தோட்டை |
| 3. கொடித்தோடை | C - பதுளை |
| | D - மொனராகலை |

(1) A, B, C  (2) A, C, D  (3) C, A, B  (4) C, B, A  (..........)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**21.**

| 'அ' மீன்பிடி தொடர்பான அமைவிடங்கள் | 'ஆ' மீன்பிடி நடவடிக்கைகள் |
|---|---|
| 1. மயிலிட்டி | A - மீன்பிடிப் பயிற்சி நிலையம் |
| 2. பேலியகொட | B - பிரதான மொத்த விற்பனை மீன் சந்தை |
| 3. கல்பிட்டி | C - மீன்களை இறக்கும் மீன்பிடித் துறைமுகம் |
| | D - மீன்களை உலர வைத்தல் மற்றும் இறால் வளர்ப்பு |

(1) A, B, C (2) B, D, C (3) C, B, A (4) C, B, D (..........)

**22.**

| 'அ' வளிமண்டலத்தின் படைகள் | 'ஆ' விசேடமான பண்புகள் |
|---|---|
| 1. மாறன் மண்டலம் | A - ஓசோன் படை அமைந்துள்ளது. |
| 2. படை மண்டலம் | B - புவியோட்டிலிருந்து 8 km - 12 km வரை விரிவடைந்துள்ளது. |
| 3. இடை மண்டலம் | C - வளிமண்டலத்தின் தாழ் வெப்பநிலை இங்கு காணப்படுகின்றது. |
| | D - இப்படை உயர் வெப்பநிலையைக் கொண்டது. |

(1) A, B, C (2) B, A, C (3) B, C, D (4) C, B, D (..........)

**23.**

| 'அ' கனிய வகை | 'ஆ' காணப்படும் பகுதிகள் |
|---|---|
| 1. சிலிக்கா மணல் | A - நிலாவெளி |
| 2. இல்மனைற் | B - பலாங்கொட |
| 3. செர்கன் | C - மாரவில |
| | D - எப்பாவல |

(1) A, B, C (2) B, D, C (3) C, A, B (4) D, A, B (..........)

**24.**

| 'அ' மெற்றிக் படங்களில் பண்பாட்டு அம்சங்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறங்கள் | 'ஆ' பண்பாட்டு அம்சங்கள் |
|---|---|
| 1. மஞ்சள் நிறம் | A - புகையிரதப் பாதைகள் |
| 2. சிவப்பு நிறம் | B - வீட்டுத் தோட்டங்கள் |
| 3. கறுப்பு நிறம் | C - பாடசாலை |
| | D - நீர்ப்பாசனக் கால்வாய் |

(1) A, B, C (2) B, C, A (3) B, C, D (4) D, B, A (.........)

● **25** தொடக்கம் **36** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அதனைக் குறித்து நிற்கும் **இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**25.** கீழே A தொடக்கம் E வரை தரப்பட்ட தகவல்களிலிருந்து கோதுமைச் செய்கைக்குப் பொருத்தமான இரண்டு தகவல்களை மாத்திரம் கொண்டிருக்கும் விடையைத் தெரிவுசெய்க.

A – ஓரினப் பயிர்ச்செய்கை மற்றும் பாரிய பண்ணை நிலங்கள்
B – கலப்புப் பயிர்ச்செய்கை முறைமை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட சிறு பண்ணைகள்
C – பாரிய அளவில் இயந்திரமயமாக்கல்
D – வளரும் பருவ காலத்தில் குளிரான ஈரக் காலநிலை மற்றும் சோணேசம் மண்
E – அடையல் மண்ணைக் கொண்ட சம தரைகள்

(1) A மற்றும் B (2) A மற்றும் D
(3) B மற்றும் C (4) D மற்றும் E (.........)

**26.** பல்வேறு வகையான மின்னல் தாக்கங்களுள் சமூகத்தை நேரடியாகப் பாதிப்பது எது?
(1) புவி மின்னல் (2) வளி மின்னல்
(3) முகில் மின்னல் (4) சூறாவளி மின்னல் (.........)

**27.** உலகில் பருத்தி பயிரிடப்படும் பிரதான இரண்டு நாடுகள்
(1) சீனா மற்றும் இந்தியா (2) எகிப்து மற்றும் தென் கொரியா
(3) யப்பான் மற்றும் உகண்டா (4) பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா (.........)

**28.** வட அத்திலாந்திக் சமுத்திரத்தில் தோன்றும் சூறாவளிக் காற்றுக்கு வழங்கப்பட்டுள்ள விசேடமான பெயர் யாது?
(1) வில்லி வில்லிகள் (2) ஹரிக்கேன் (3) தைபூன் (4) பாகியோ (.........)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**29.** மனித இனத்தின் இருப்புக்கு அத்தியாவசியமான ஒளித்தொகுப்புச் செயன்முறை இடம்பெறுவது,
(1) மாறன் மண்டலத்தில் (2) கற்கோளத்தில்
(3) படை மண்டலத்தில் (4) உயிர்க்கோளத்தில் (.........)

**30.** உருமாறிய பாறைகள் இரண்டினை மாத்திரம் கொண்டிருக்கும் விடையினைத் தெரிவுசெய்க.
(1) வைரங்கள், மாக்கல் (2) சுண்ணாம்புக் கற்கள், நிலக்கரி
(3) காரீயம், கிப்ஸம் (4) வைரங்கள், நிலக்கரி (.........)

**31.** கொவிட்-19 தொற்றுப் பரவலினால் மிக மோசமான பின்னடைவுக்குட்பட்ட உலகப் பொருளாதார நடவடிக்கை
(1) உணவு உற்பத்தி (2) ஆடைக் கைத்தொழில்
(3) தயாரிப்பு உற்பத்திகளின் ஏற்றுமதி (4) சுற்றுலாக் கைத்தொழில் (.........)

**32.** இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழில் பற்றிய உண்மையான கூற்று யாது?
(1) ஆழ் கடலில் இருந்தே பெருமளவான மீன்கள் பிடிக்கப்படுகின்றன.
(2) தொழில்நுட்ப முறைகளின் பயன்பாடு உயர் மட்டத்தில் உள்ளது.
(3) மீன்பிடி உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தாலும், மீன்பிடிக் கைத்தொழிலில் சுயதேவை மட்டத்தினை நாடு இன்னமும் அடைந்துகொள்ளவில்லை.
(4) கரையோர மீன்பிடிக் கைத்தொழிலின் தனியுரிமையானது பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கத்தில் உள்ளது. (.........)

**33.** நாடொன்றின் மனித வளங்களை விருத்திசெய்வதற்கு எடுக்கக்கூடிய உற்பத்திறன் மிக்க நடவடிக்கை,
(1) சாதகமான உளப்பாங்கினை விருத்திசெய்தல்
(2) உடல் மற்றும் உளத் திறன்களை விருத்திசெய்தல்
(3) கட்டுமான வசதிகளை மேம்படுத்தல்
(4) தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்தல் (.........)

**34.** தொழில்நுட்ப விருத்தியின் காரணமாக எதிர்கால உலகம் எதிர்கொள்ளப்போகும் மிக மோசமான சூழலியல் பிரச்சினைக்கு வழிவகுக்கும் பிரதான விடயம்
(1) சமுத்திர நீரில் பெற்றோலியம் கலத்தல்
(2) பிளாஸ்திக் கழிவுகளைச் சமுத்திரத்திற்குள் வெளியேற்றல்
(3) மனித நடவடிக்கைகளின் காரணமாக காடுகளின் சதவீதம் வீழ்ச்சியடைதல்
(4) இலத்திரனியல் கழிவுகளை ஒழுங்கற்ற முறையில் வெளியேற்றல் (.........)

**35.** கிராஸ்காப் (Grass Carp), சில்வர் காப் (Silver Carp), கட்லா (Catla) மற்றும் குராமி போன்ற மீன் வகைகள் பிடிக்கப்படுவது,
(1) ஆழ் கடலில் ஆகும்.
(2) ஆழமற்ற கரையோரக் கடலில் ஆகும்.
(3) நன்னீர் தேக்கங்களில் ஆகும்.
(4) கடனீரேரிகள் போன்ற உவர்நீர்த் தேக்கங்களில் ஆகும். (.........)

**36.** மண் படைகளுக்கு இடையில் சேர்த்து வைக்கப்படும் நீர்
(1) மேற்பரப்பு நீர் (2) தரை நீர் (3) மண்ணீர் (4) உட்புகு நீர் (.........)

● A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள ஒன்றுடனொன்று தொடர்புடைய தலைப்புக்களின் சோடிகளை நன்கு அவதானித்து, **37** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

A – 1. சுவட்டு எரிபொருள் எரிதல்
2. புதுப்பிக்கக்கூடிய சக்திவலு

B – 1. இடப்பெயர்வு
2. குடித்தொகை

C 1. நிலப் பயன்பாடு
2. மண் அரிப்பு

D – 1. பூகோளம் வெப்பமடைதல்
2. சூரியப் புள்ளிகள்

**37.** முதலாவதின் மோசமான பாதிப்புக்களை இழிவளவாக்குவதற்குக் காரணமாகும் இரண்டாவதினைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?
(1) A (2) B (3) C (4) D (.........)

**38.** முதலாவதில் ஏற்படும் அதிகரிப்புக்கு இரண்டாவது காரணமாவதைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?
(1) A (2) B (3) C (4) D (.........)

**39.** இரண்டாவதில் ஏற்படும் அதிகரிப்பும் வீழ்ச்சியும் முதலாவதன் விளைவாகும் என்பதைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?
(1) A (2) B (3) C (4) D (.........)

**40.** முதலாவதில் ஏற்படும் ஒழுங்கின்மைகள் இரண்டாவதற்கு காரணமாகும் என்பதைக் குறித்துக் காட்டும் தலைப்புச் சோடி யாது?
(1) A (2) B (3) C (4) D (.........)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ஸியலு ம ஹிமிகம் ஆவிரிணி / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**61 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

භූගෝල විද්‍යාව I, II
புவியியல் I, II
Geography I, II

## புவியியல் II

※ இவ்வினாத்தாள் **I, II** என்னும் **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
※ பகுதி **I** இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ), (ஆ), (இ) ஆகிய **மூன்று** பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.
※ பகுதி **II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
※ எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

## பகுதி I

**1.** (அ) உமக்குத் தரப்பட்டுள்ள 1 : 50 000 அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப் படத்தின் பகுதியை நன்கு அவதானித்து, அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகளை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் (பக்கம் **8**) பயன்படுத்துக.

(i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

(i) Ⓐ எழுத்தினால் காட்டப்படுவது யாது?
(கண்டல் தாவரம் / கரையோரப் பாதுகாப்புப் பாறைத்தொடர் / மணல் மேடு) (01 புள்ளி)

(ii) Ⓑ எழுத்தினால் காட்டப்படும் அம்சம் யாது?
(பற்றைகள் / சதுப்பு / புல்நிலம்) (01 புள்ளி)

(iii) Ⓒ எழுத்தினால் காட்டப்படும் இளஞ்சிவப்பு நிறப் பகுதி யாது?
(கட்டப்பட்ட பகுதி / சுற்றுலா வலயம் / பாதுகாக்கப்பட்ட பகுதி) (01 புள்ளி)

(iv) Ⓓ எழுத்தினால் காட்டப்படுவது யாது?
(ஆள்புலக் கடல் எல்லை / கண்டச் சாய்வு எல்லை / சம ஆழக்கோடு) (01 புள்ளி)

(v) Ⓔ எழுத்தினால் காட்டப்படும் நிர்வாக எல்லை யாது? (01 புள்ளி)

(vi) Ⓕ எழுத்தினால் காட்டப்படும் நாற்பக்கல் பகுதியில் பொதுச் சேவைகளை வழங்கும் **இரண்டு** நிறுவகங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)


● படப் பகுதி பற்றிய மூன்று கூற்றுகள் கீழே தரப்பட்டுள்ளன. அந்த ஒவ்வொரு கூற்றினையும் வாசித்து அவை சரியாயின் ச / ✓ எனவும் பிழையாயின் பி / × எனவும் விடைத்தாளில் தரப்பட்டுள்ள வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.

(vii) படப் பகுதியில் காணப்படும் பிரதான வர்த்தகப் பயிர் தென்னையாகும். (01 புள்ளி)

(viii) படப் பகுதியில் பிரதான ஆற்றினைச் சூழ்ந்து சேனைச் செய்கை பரந்தளவில் பரம்பிக் காணப்படுகின்றது. (01 புள்ளி)

(ix) இப் பகுதியில் நெற் செய்கையானது மழை நீரின் உதவியுடனேயே இடம்பெறுகின்றது. (01 புள்ளி)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/




SCALE : 1 : 50 000

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Ord. Level) Examination, 2020

විභාග අංකය / சுட்டெண் / Index Number ..................................

(61) භූගෝල විද්‍යාව II
புவியியல் II
Geography II

පරීක්ෂකවරයාගේ ප්‍රයෝජනය පිණිසයි. / பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் / For Examiner's Use Only

1. (අ) /(அ) /(a)

(i) ..................................................................

(ii) ..................................................................

(iii) ..................................................................

(iv) ..................................................................

(v) ..................................................................

(vi) ..................................................................

..................................................................

(vii) ..................................................................

(viii) ..................................................................

(ix) ..................................................................

10

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

(ஆ) உமக்கு தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் (பக்கம் **9**) பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

(i) **கலிபோர்ணியா குடாநாடு** - Ⓦ, Ⓧ, Ⓨ


(ii) **துருக்கி,** அண்மையில் இடம்பெற்ற புவிநடுக்கத்தினால் பெரும் சேதங்களை எதிர்நோக்கிய ஒரு நாடு - Ⓝ, Ⓞ, Ⓟ

(iii) **அந்தமான் தீவுகள்,** எதிர்காலத்தில் பொருட்களைக் கப்பலில் மாற்றி ஏற்றுவதற்கு இந்தியாவினால் கட்டமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள துறைமுகம் ஒன்று இங்குள்ளது - Ⓡ, Ⓢ, Ⓣ

(iv) **பம்பாஸ் புல்நிலங்கள்** - Ⓚ, Ⓛ, Ⓜ

(v) **சிட்னி நகரம்** - Ⓑ, Ⓒ, Ⓓ (05 புள்ளிகள்)

(அ) /(ஆ) /(b)




| | |
|---|---|
| (i) | |
| (ii) | |
| (iii) | |
| (iv) | |
| (v) | |

/5

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினைக் கவனமாக அவதானித்து, கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரலைப் (பக்கம் **9**) பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தை படத்திலிருந்து தெரிவுசெய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்துக்கும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.

(i) அண்மையில் அபிவிருத்தி செய்யப்பட்ட **பலாலி விமான நிலையம்** - Ⓖ, Ⓗ, Ⓙ


(ii) சூழலியல்வாதிகளின் கவனத்திற்குட்பட்டுள்ள **ஆனைவிழுந்தான் சரணாலயம்** - Ⓐ, Ⓑ, Ⓒ

(iii) **பியகம** ஏற்றுமதிச் செயன்முறை வலயம் - Ⓓ, Ⓔ, Ⓕ

(iv) **சங்கமான்கந்த** முனை - Ⓞ, Ⓟ, Ⓡ

(v) அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட **மொறககாகந்த நீர்த்தேக்கம்** - Ⓚ, Ⓛ, Ⓜ (05 புள்ளிகள்)

(இ) /(இ) /(c)




(i) ☐

(ii) ☐

(iii) ☐

(iv) ☐

(v) ☐


5

1. (அ) (அ) (a) $\frac{}{10}$ (ஆ) (ஆ) (b) $\frac{}{5}$ (இ) (இ) (c) $\frac{}{5} = \frac{}{20}$

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி II

**2.** புவி அமைப்பின் படைகளானது குறுக்குப் பக்கப்பார்வை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




(i) (a) இல. ① இனால் குறித்துக் காட்டப்படும் A மற்றும் B படைக்கு இடையிலான எல்லையாகக் காட்டப்படும் தொடர்ச்சியின்மையின் பெயரையும்

(b) இல. ② இனால் குறித்துக் காட்டப்படும் C மற்றும் D படைக்கு இடையிலான எல்லையாகக் காட்டப்படும் தொடர்ச்சியின்மையின் பெயரையும் முறையே எழுதிக் காட்டுக. (02 புள்ளிகள்)

(ii) A படை அமைப்புடன் இணைந்து காணப்படும் விசேடமான பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக (03 புள்ளிகள்)

(iii) கற்கோளத்தில் ஏற்படும் பல்வேறு தாக்கங்களில் மனித நடவடிக்கைகள் **மூன்றினைப்** பெயரிட்டு, அவற்றுள் ஒன்றினால் ஏற்படும் தாக்கங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) உலக விவசாய நிலப்பயன்பாட்டின் **இரண்டு** பிரதான பிரிவுகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் பெருந்தோட்ட விவசாயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் தெங்குப் பயிர்ச்செய்கையில் தற்பொழுது தோன்றியுள்ள **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கைப் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதற்கு தெங்குக் கைத்தொழிலின் விருத்தி ஏன் முக்கியமானது என்பதை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

**4.** (i) கைத்தொழில்களின் அமைவிடத்தில் தாக்கம் செலுத்தும் சக்திக் காரணிகளுக்குரிய **இரண்டு** சக்தி மூலங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) உலகின் இரும்பு மற்றும் உருக்கு உற்பத்திக் கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் **மூன்று** போக்குகளை எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் குடிசைக் கைத்தொழிலாளர்கள் தமது கைத்தொழில் தொடர்பாக அவர்கள் எதிர்நோக்கும் **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) மேலே (iii) (a) இல் குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை முன்மொழிக. (02 புள்ளிகள்)

**5.** (i) இலங்கையில் பயிர்செய்யப்படும் மரக்கறி வகைகளில்,

(a) உயர்நில வலயத்தில் பரந்தளவில் பயிர்செய்யப்படும் மரக்கறி வகை **ஒன்றினையும்**

(b) வரண்ட வலயத்தில் பரந்தளவில் பயிர்செய்யப்படும் மரக்கறி வகை **ஒன்றினையும்** முறையே பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் மரக்கறிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளினால் எதிர் நோக்கப்படும் **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் வர்த்தக நோக்கில் பயிரிடப்படும் **இரண்டு** பழவகைகளைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(b) இலங்கையின் தேசிய பொருளாதாரத்திற்குப் பங்களிக்கும் வகையில் பழங்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய **இரண்டு** நடவடிக்கைகளை முன்வைத்து, அவற்றுள் **ஒன்றினைப்** பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (03 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**6.** (i) உலகில் குறைவடைந்து வரும் இயற்கை வளங்கள் **இரண்டினைப்** பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கையில் மண் வளங்களின் பயன்பாட்டுடன் தொடர்புடைய **மூன்று** பிரச்சினைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையில் கனிய வளங்களின் பயன்பாட்டினால் சூழலுக்கு ஏற்பட்டு வரும் சேதங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(b) உம்மால் மேலே (iii) (a) இல் குறிப்பிடப்பட்ட சேதங்களைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கை **ஒன்றினை** விவரிக்குக. (03 புள்ளிகள்)

**7.** (i) உலகில் வரட்சி அனர்த்தம் பரந்தளவில் காணப்படும் **இரண்டு** பிரதேசங்களைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) வரட்சி அனர்த்தத்தின் காரணமாக

(a) பௌதிகச் சூழலுக்கு ஏற்படும் தாக்கம் **ஒன்றையும்**

(b) சமூகச் சூழலுக்கு ஏற்படும் **இரண்டு** தாக்கங்களையும்

குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) இலங்கையில் நிலச்சரிவு அனர்த்தத்தினை இழிவளவாக்குவதற்கு எடுக்கக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (05 புள்ளிகள்)

**8.** (i) பூகோள வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்புக்குப் பங்களிக்கும்

(a) மானிட நடவடிக்கை **ஒன்றினையும்**

(b) இயற்கை காரணம் **ஒன்றையும்**

குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பூகோள வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பின் காரணமாக இடம்பெறும் சாதகமற்ற சூழலியல் தாக்கங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) பூகோள வெப்பநிலையில் ஏற்படும் அதிகரிப்பினை இழிவளவாக்குவதற்கு பிரஜை என்ற முறையில் உம்மால் எடுக்கக்கூடிய **மூன்று** நடவடிக்கைகளை முன்வைத்து, அவற்றுள் **ஒன்றினை** விவரிக்குக. (05 புள்ளிகள்)

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/